**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**IDOP.No. 28/2015**

P.W.1 ஜான்பீட்டர் த/பெ.அந்தோணி நாள் – 18.09.2025.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

மனுதாரர் தற்போது 2-வது திருமணம் செய்து கொண்டு புதுக்கோட்டையில் வசித்து வருகிறார் என்றால் தவறு . கோட்டைக்காடு என்பது ஒரு பெரிய கிராமம் என்றால் சரிதான் . அந்த கிராமத்தில் சுமார் 1000 தலைக்கட்டுகள் இருக்கும் என்றால் இல்லை , 300 தலைக்கட்டுகள் இருக்கும். கோட்டைக்காட்டிற்கும், தற்போது நான் வசித்து வரும் இடத்திற்கும் சுமார் 400-450 கிலோ மீட்டர் வரும் என்றால் சரிதான் . மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமணம் முடிந்து வாழ்க்கையை கோட்டைக்காட்டில் தான் நடத்தினார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய விவரங்கள் மனுதாரர் சொல்லி தான் தெரியும் என்றால் நேரடியாகவும் தெரியும் , மனுதாரர் சொல்லியும் தெரியும். இந்த வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார்கள் , என்ன பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் ஜோசப் கென்னடி வழக்கு தாக்கல் செய்துள்ளார் , விவாகரத்து கோரியுள்ளார். அதற்கு என்ன காரணம் சொல்லியுள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும் . நான், மனுதாரர் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு நேரில் செல்லவில்லை என்றால் சரியல்ல , சென்றிருக்கிறேன். எனக்கு கோட்டைக்காட்டில் இன்றுவரை ரேசன் கார்டோ , ஆதார் கார்டோ கிடையாது என்றால் தற்போது இல்லை . எனக்கு கிராமத்தில் உள்ள நிலங்களின் புல எண்கள் தெரியுமா என்றால் தெரியாது . எந்த ஆவணங்களும் என்னுடைய பெயரில் இல்லை என்றால் சரியல்ல, ஆவணங்கள் உள்ளது. மனுதாரர் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றால் சரிதான். மனுதாரர் எனது அத்தை மகன் என்றால் சரிதான் . எனது உடன்பிறந்தவர்கள் ஒரு சகோதரர் , மூன்று சகோதரிகள் ஆவார்கள் . நான் எனது சகோதரியை மனுதாரருக்கு திருமணம்

செய்ய முயற்சி செய்தேன் என்றும் , அந்த முயற்சி வெற்றிபெறவில்லை என்பதால் பகைமை பாராட்டி மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காதல் திருமணம் செய்து ஊரைவிட்டு சென்றுவிட்டேன் என்றால் சரிதான் . சாட்சி மீண்டும் நான் ஊரைவிட்டு செல்லவில்லை, எனது பெற்றோர் விருப்பத்தின் பேரில் தான் நான் திருமணம் செய்து கொண்டேன். எந்த தேதியில், எந்த ஊரில் பஞ்சாயத்து பேசினோம் என்றால் கோட்டைக்காட்டில் பஞ்சாயத்து பேசினோம் , தேதி நினைவில்லை. எங்களுடன் பஞ்சாயத்திற்கு யார் யார் வந்தார்கள் என்றால் அல்போன்ஸ் , சேவியர், சூசை, மற்றும் 4–5 நபர்கள் வந்திருந்தார்கள். நான் மனுதாரரின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எதிர்மனுதாரர் வீட்டில் இதுவரை எந்த விசேசமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல , நடந்துள்ளது. எதிர்மனுதாரரின் அண்ணனுக்கு திருமணம் நடந்தது . எதிர்மனுதாரரின் குழந்தைகளுக்கு ஞானஸ்தானம் நடந்தது. அந்த எந்த தேதியில் நடந்தது என்றால் தேதி ஞாபகமில்லை, 2001 ல் நடந்தது. மனுதாரர் தற்போது எங்கு வேலை பார்க்கிறார் என்றால் அரசு பள்ளியில் வேலை பார்க்கிறார், சரியாக எங்கு வேலை பார்க்கிறார் என்று தெரியவில்லை. எனக்கு எந்த விவரங்களும் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எனது அப்பா இறந்ததற்கு தான் சொந்த ஊருக்கு வந்தேன் என்றும் , அதற்கு முன்பு நான் வந்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*